**S.C. 323 /2017**

**P.W. 7 திரு.சுப்ரமணியன், 13.08.2019**

**எதிரிகள் தரப்பில் 311சி.ஆர்.பிசி மனு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனுவும் அனுமதிக்கப்பட்டு அசா.7ஐ எதிரிகள் தரப்பு கு.வி:**

சம்பவத்திற்கு முன்பு நான் மெஜராக்கோர்ட்ஸில் வேலை பார்த்தேன். வாட்ச்மேன் செக்கியூரிட்டி சர்வீஸ் என்று தனியாக நிறுவனங்கள் உள்ளது என்றால் சரிதான். அந்த நிறுவனத்தின் வாயிலாகதான் நான் சம்பவ தினத்தில் வாட்மேனாக வேலை பார்த்தேன். நான் பணிபுரிந்த செக்கியூரிட்டி சர்வீஸ் பெயர் தெரியாது. எனக்கு சம்பளம் அனைத்தும் செக்கியூரிட்டி சர்வீஸ் மூலம் தருவார்கள் என்றால் ஓனர் தருவார். என்னுடைய மகன் அழகேந்திரா ஆட்டோமொபைல் பைப்கம்பெனியில் வேலை பார்க்கிறார். அவர் மூலமாகதான் அழகேந்திரா ஆட்டோமொபைல் ஓனர் தெரியும். நாங்கள் தினமும் பணிக்கு செல்வதற்கு பதிவேடு பராமரிக்கப்படுகிறது என்றால் சரிதான். மேற்படி பதிவேட்டை சூப்ரவைசர் மேற்பார்வை செய்வார் என்றால் சரிதான். போலிசார் என்னை விசாரித்த போது நான் சம்பவ தினத்தில் அலுவலகத்திற்கு வந்தேனா என்பது குறித்து பதிவேட்டை பார்த்தார்களா என்றால் எனக்கு தெரியவில்லை. போலிசார் என்னை 28.02.2017ஆம் தேதி விசாரித்தார்கள். நான் அப்போது பணியில் பகல் சிப்ட்டில் இருந்தேன். நான் பகல்சிப்டில் பணியிலிருந்த போது 28.02.2017ஆம் தேதி விசாரித்ததை தவிர வேறு எப்போது போலிசார் என்னை இந்த வழக்கு சம்பந்தமாக விசாரிக்கவில்லை. அழகேந்திரா ஆட்டோமொபைல் முதலாளியின் வீடு நடுவே வீடும் சுற்றி கோட்டை சுவர் கட்டியும் இரண்டு ஆள் உயரத்திற்கு இரும்பு கேட் போட்ட கதவும் இருக்கும் நான் கேட்டிற்கு உட்புறம்தான் இருப்பேன். எனக்கு கேட்டிற்கு வெளியே யார் வருகிறார்கள் யார் போகிறார்கள் என்ற விவரம் தெரியாது. இரும்பு கேட்டில் ஒருஆள் உயரத்திற்கு அப்பால் ஒரு சின்ன ஜன்னல் இருக்கிறது அதன் வழியாகத்தான் பொருட்களை வாங்கவோ கொடுக்கவோ செய்வோம். 2வது எதிரிக்கும் எனக்கும் நேரடியாக எந்த சம்பந்தமும் கிடையாது. இந்த சம்பவத்திற்கு முன்போ பின்போ நான் அவரை பார்த்தது கிடையாது. முதன்முதலாக நீதிமன்றத்தில்தான் அவரை அடையாளம் காட்டினேன். போலிசார் விசாரணையில் 2வது எதிரி பற்றி தனிப்பட்ட அடையாளங்கள் எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். அழகேந்திரா ஆட்டோமொபைல்

ஓனர் வீட்டில் யார் குடியிருக்கிறார்கள் அவருக்கு எந்தனை குழந்தைகள் அவர்கள் எங்கு குடியிருக்கிறார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. விஜயா என்பவரிடம் நான்தான் சாவி வாங்கி வந்தேன். விஜயா என்பவரிடம் 2வது எதிரி அவரின் மகன்தான் என்று அடையாளம் காட்ட நான் அழைக்கவில்லை. கேட்டிலிருந்து நான் வீட்டிற்குள் செல்லவேண்டுமென்றால் மற்றொரு காவலாளி மாற்றம் செய்த பிறகுதான் நான் செல்லமுடியும். சம்பவ தினத்தில் மாற்றி காவலாளி யார் என்று போலிசார் என்னை விசாரிக்கவில்லை. நான் சம்பவ தினத்தில் அழகேந்திரா ஆட்டோமொபைல்ஸ் ஓனர் வீட்டில் நான் வேலை பார்க்கவில்லை என்றாலும் என் மகன் அவருக்கு கீழ் பணிபுரிவதால் அவர் சொல்லிக்கொடுத்தும் ஓனரின் வேண்டுகோளின்படியும் விஜயா மற்றவர்களை காப்பாற்ற வேண்டுமென்றும் போலிசார் சொல்லிக்கொடுத்தன் பேரில் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**S.C. 323 /2017**

**P.W. 8 திரு.சுடலைமுத்து, 13.08.2019**

**எதிரிகள் தரப்பில் 311சி.ஆர்.பிசி மனு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனுவும் அனுமதிக்கப்பட்டு அசா.8ஐ எதிரிகள் தரப்பு கு.வி:**

நான் சம்பவ தினத்தில் அழேகந்திரன் ஆட்டோ எமஹா ஷோரூமில் பணிபுரிந்து வந்தேன் என்றால் சரிதான். எமஹா ஷோரூமில் இரண்டு சக்கர வாகனங்களை விற்பனை செய்யும் பணி நடைபெறும். அழகேந்திரன் ஆட்டோமொபைல்ஸ் என்பது நான்கு சக்கர வாகனங்களுக்குரிய உதிரி பாகங்களை விற்பனை செய்வது ஆகும். அழகேந்திரன் ஆட்டோ மொபைல்ஸ்க்கும் எமஹா ஷோரூம்க்கும் பணிபுரிபவர்கள் தனித்தனி என்றால் சரிதான். நான் போலிசார் விசாரணையில் அழகேந்திரன் ஆட்டோமொபைல்ஸில் மேலாளராக பணிபுரிந்ததாக கூறவில்லை. எனது கம்பெனியிலிருந்து சம்பவ இடம் சுமார் 7 கி.மீ தூரமிருக்கும். எங்கள் கம்பெனியிலிருந்து சம்பவ இடத்திற்கு செல்ல சுமார் முக்கால் மணிநேரத்திலிருந்து ஒரு மணிநேரமாகும் என்றால் சரிதான். நான் பன்னிரெண்டாம் வகுப்பு படித்துள்ளேன். சம்பவத்தின் போது எனது ஓனரின் வீட்டை சுற்றிலும் கேமாராக்கள் இருந்தது. அந்த கேமராக்களின் பதிவுகள் எல்லாம் வீடியோ ரெக்கார்டடு என்ற ஒரு மெசினில் பதிவாகும் என்பது எனக்கு தெரியும். அந்த வீடியோ ரெக்காடில் ஒரு ஹார்டு டிஸ்க் உள்ளது அதில்தான் இந்த பதிவுகள் அனைத்தும் நினைவகப்படுத்தி உள்ளது என்றால் சரிதான். வீடியோ ரிக்கார்டடு சிசிடிவி கேமரா போன்றவற்றை பராமரிக்க தனியாக ஆட்கள் இருக்கிறார்கள் என்றால் சரிதான். அந்த பணிக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது. வீடியோ ரெக்கார்டடிலிருந்து நேரடியாக சிடியில் பதிவிறக்கம் செய்யமுடியாது என்றால் சரிதான். அந்த வீடியோ ரிக்கார்டடில் உள்ள ஹார்டு டிஸ்க்கில் உள்ளதை பென்டிரைவ் யூஎஸ்பி போன்றவற்றில் தான் காப்பி செய்யமுடியும் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. போலிசார் என்னை மூன்றாவது மாதம் விசாரித்தார்கள். வழக்கு சம்பவம் நடந்து ஆறு நாட்கள் கழித்து காவல் நிலையத்தில் வைத்து விசிரித்தார்கள். எனது முதலாளியிடம் போலிசார் சிடி கேட்டதால் நான் போலிசாரிடம் சிடியை கொண்டு போய் கொடுத்தேன். போலிசார் என்னிடம் சிடியில் உள்ள பதிவுகளை நான் எவ்வாறு எடுத்தேன் என்ற விவரம் கேட்கவில்லை. சிடியில் உள்ள பதிவுகளை பதிவிறக்கம்

செய்தது அந்த வீட்டில் வேலை பார்க்கும் நபராவார். அவர் சிஸ்டம் இன் ஜினியர் ஆவார். என்னுடைய பணி முதலாளி கொடுத்த சிடியை போலிசாரிடம் கொடுத்தது மட்டும்தான். நான் சொன்னமாதிரி சொன்ன விதத்தில் போலிசாரிடம் சென்று சிடியை கொடுக்கவில்லை என் முதலாளி சொன்னதன் பேரில் சாட்சியாக போட்டு என்ன விசாரித்துள்ளார்கள் என்றால் சரியல்ல. நான் சிடி கொடுக்கும் போது போலிசார் என்னிடம் கையொப்பம் பெற்றார்கள்.

**S.C. 323 /2017**

**P.W. 9 திரு.கணேசன், 13.08.2019**

எதிரிகள் தரப்பில் 311சி.ஆர்.பிசி மனு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனுவும் அனுமதிக்கப்பட்டு அசா.9ஐ எதிரிகள் தரப்பு கு.வி:

நான் உசிலம்பட்டியில் கண்ணாடி கடை வைத்து நடத்திவருகிறேன். அசா.2ராமராஜு என்னுடைய உறவினர். அவர் உசிலம்பட்டியை தாண்டியுள்ள ராயப்பன்பட்டியில் குடியிருந்து வருகிறார். இந்த வழக்கு சம்பவம் குறித்து அசா.2தான் எனக்கு முதன்முதலாக தகவல் கொடுத்தார். அசா.2 தகவல் கொடுத்த பிறகு நான் ஊரிலிருந்து தனியாக கிளம்பினேன். உசிலம்பட்டியிலிருந்து சம்பவ இடத்திற்கு வருவதற்கு சுமார் ஒருமணிநேரமாகும். நான் சம்பவ இடத்திற்கு வரும்போது போலிசார் பொதுமக்கள் அனைவரும் இருந்தனர். போலிசார், இறந்தவர் எனது உறவினார் என்பதால் என்னை அழைத்து விசாரித்தார்கள். நான் போலிசார் பொருட்களை எடுப்பதை நான் நேரடியாக பார்த்தேன். போலிசார் எடுத்த பொருட்களை தனிப்பட்ட அடையாளம் சொல்லமுடியாது என்றால் டொரினோ பாட்டில் 2 எடுத்தார்கள் மற்றபடி பொருட்களை குறித்து அடையாம் தெரியாது. பொதுவாக குளிர் பானங்களில் அது தயார் செய்த தேதி மற்றும் பயன்படுத்தும் கடைசி தேதி குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் சரிதான். நான் சொன்னமாதிரி சொன்ன தினத்தில் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றும் என் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம், அத்தாட்சி ஆகியவை தயார் செய்யவில்லை என்றும் அசா.2 மற்றும் இறந்தவர் எனது உறவினர் என்பதால் போலிசார் சொல்லிக்கொடுத்து பின்னிட்டு ஆவணங்களில் காவல் நிலையத்தில் கையொப்பம் செய்து பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.